**நுவரெலியா பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுக்காக கிடைத்திருந்த ரூபா 360,000 ஆன விளம்பர பதாதை வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 524,500 ஆன விளம்பர பதாதை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சீராக்குவதாக | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்க வேண்டும் |
| (ஆ) ரூபா 193,462 கூட்டுத்தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த மடிக் கணினி இயந்திரம் மற்றும் காசோலை இயந்திரம் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் இறுதித் தேதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் ரூபா 740,546 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | கணக்கிட்டு பதிவுகளை பயன்படுத்தி அடுத்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நீதிக்கூற்றுக்களில் சரியான மீதிகளை காண்பிக்க வேண்டும் |
| (ஈ) மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கும் பணமாக கிடைத்திருந்த முத்திரை வரி வருமானம் ரூபா 10,369,320 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இனங்காணப்பட்டு சீராக்குவதாக | சரியான பெறுமதி நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த முத்திரை வரி ரூபா 3,541,900 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 ஆம் ஆண்டில் தவறுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |
| (ஊ) | ரூபா 71,000 ஆன மோட்டார் சைக்கிள் ஒன்று மோட்டார் வாகனங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | மோட்டார் வண்டி மற்றும் வண்டில்கள் கணக்கிற்கு உள்ளடக்கி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலையான சொத்துக் கணக்குகளுக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டின் போது கொடுப்பளவு செய்யப்பட்ட ரூபா 608,166 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | முன்னைய ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 06 கணக்கு மீதிகளுக்குரிய ஆரம்ப புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 3,892,531 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | குறித்த பெறுமதிகளை உள்ளடக்கி எதிர்காலத்தில் கணக்குகளைத் தயாரிகப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் ரூபா 11,937,327 பெறுமதியான 06 கணக்கு மீதிகள் அதற்குரிய ஆவணங்கள் அட்டவணைகள் குத்தகை உடன்படிக்கைகள் சமர்ப்பிக்காமையால் கணக்காயின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது | குறித்த அட்டவணைகள் மற்றும் உடன்படிக்கைகளை தயாரித்து எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதாக | அட்டவணைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1952 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நியம உப உறுப்புரையின் 39 ஆவது உப உறுப்புரை | | | |
| i | 01 ஆம் பந்தி | பிரதேச சபையால் 2020 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டின் செப்தம்பர் வரை 68 விளம்பர பதாதைகளுக்காக ரூபா 8,835,775 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்த போதும் அனுமதிப் பத்திரம் ஒன்று வழங்கப் பட்டிருக்க வில்லை | 2023 ஆம் ஆண்டில் விளம்பர பதாதைகளுக்காக கட்டணங்களை அறவிடும் போது குறைபாடுகளை சீராக்குவதாக | உப உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| ii | 2(எ) பந்தி | 8720 சதுரஅடி அளவிலான விளம்பர பதாதைக்காக ரூபா ஒன்று 1,308,000 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | மேலும் நிலுவையை அறவிடுவதற்காக குறித்த நிறுவனங்களை அறிவூட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி ஆதனங்கள் 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | புதிய சபை நிறுவப்பட்டதன் பின்னர் புதிய மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களில் சபை வேண்டுகோள் விடுக்கப்பட்டு இருந்த போதும் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கவில் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,234,153 ஆக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,872,109 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,578,000 | 4,430,583 | 5,117,826 | 1,940,827 | 4,578,000 | 5,476,754 | 3,960,440 | 2,628,070 |
| (ii) | வாடகை | 6,547,916 | 85,865,475 | 86,330,192 | 1,020,167 | 7,491,667 | 6,228,598 | 8,660,973 | 1,484,884 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,767,000 | 2,301,478 | 2,301,478 | - | 4,000,000 | 1,966,059 | 5,913,747 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 58,700,821 | 15,086,522 | 12,365,771 | 6,741,728 | 67,630,827 | - | 53,269,545 | 4,020,977 |
| | | 72,593,737 | 107,684,058 | 106,115,267 | 9,702,722 | 83,700,494 | 13,671,411 | 71,804,705 | 8,133,931 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| i | 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் வரை யான காலப்பகுதிக்குரிய ரூபா 336,895 ஆன வீதவரி புகையிறத திணைக்களத்திலும் இருந்து அறுவிடப்பட்டிருக்கவில்லை | நானுஓயாவில் அமைந்துள்ள புகையிரத திணைக்களத்திற்கு இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களின் போது அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| ii | 59 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 386,545 ஆன நிலுவை வீதவரிகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158 மற்றும் 159 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | வீதவரி விடய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டு வருமான பரிசோதகர்கள் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

(ஆ) வாடகை

| | | |
|---|---|---|
| அரச இல்லங்களில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 77,005 தொகை 2018 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | குடியிருப்பாளர் ஒருவருக்கு முன்னால் தலைவரால் உரித்துறுதி ஒன்று வழங்கப்பட்டுள்ளதுடன் சட்டரீதியான தன்மை தொடர்பாக மீண்டும் பரிசோதனையொன்று மேற்கொள்வதாக | உரித்தை தீர்வு செய்து நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும் |

(இ) நீர்க் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| 44 நீர் பாவனையாளர் களிடமிருந்து 2018 ஆம் ஆண்டு முதல் ரூபா 191,880 ஆன நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டி ருக்கவில்லை | பகுதிகளாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |

(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம்
மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,020,916 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,720,812 ஆக இருந்தது. | கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 27 வது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் வீதிகள் வர்த்தமானில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | வர்த்தமானில் வெளியிடுவதற்குரிய வீதிகள் கணக்கிடப்பட்டு அதற்காக பாதீட்டிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 78 ஆம் பிரிவில் செயற்பாடுகளின் கீழ் எடுக்கப்படும் உணவு தன்மைக்காக உணவு மாதிரிகளை பரீட்சிப்பதற்கும் உணவு உற்பத்தி நிறுவனங்களை அறிவூட்டு வதற்கும் பொது சுகாதார பரிசோதகர் ஊடாக மேற்கொள்வதற்கு செயல் நடவடிக்கை திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | அச்செயற்பாடு தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 24,325,000 ஆன 8 காணி மற்றும் கட்டிடங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலேயே உள்ளவாறு நான்கு கனபிகள் இருக்கையில் ரூபா 745,000 செலவிடப்பட்டு 05 கனெபி ஹெட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன கனப்பி ஹெட்களை வாடகை அடிப்படையில் வழங்கும் போது ஒரு நாளைக்கு ரூபா 1,000 மற்றும் ரூபா 2,000 திருப்பி செலுத்தும் வைப்பாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 20 சந்தர்ப்பங்களில் கட்டணங்கள் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டு முதல் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு உரிய கிரிமெட்டியவில் உள்ள 07 கடைகள் குத்தகையாளர்களால் அனுமதியின்றி தனிப்பட்ட ரீதியில் நவீனமாக்கப்பட்டிருந்ததுடன் சபை | குறித்த ஆதனங்களுக்காக சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு குத்தகை | சபை ஆதனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| பூமியில் புதிதாக 04 கடைகள் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 05 ஆம் இலக்க கடை மற்றும் 06 ஆம் இலக்க கடைகள் வழங்கப்பட்டிருந்த கடை உரிமையாளருக்கு பிரதேச சபை தலைவரால் உறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. | அறவீடு செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |

**3.4 ஒப்பந்த நிர்வாக்த்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) டைரப்பா வைத்த வீதியின் பொது வடிகால் நிர்மானம் ரூபா 1,364,874 | | |
| i -கொங்கிரீட் கலவை இயந்திரங்களின் மூலம் நிறைவேற்ற முடியுமாக இருக்கையில் கையால் கொங்கிரீட் கையால் (manual)குழைத்தல் இடம்பெறும் நிர்மாணமொன்றாக கூடுதலாக விலை விகிதத்தை பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 54,124 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | மிகை கொடுப்பனவு பிடிக்காசு தொகை கொடுப்பனவு சந்தர்ப்பத்தின் போது அறவிடப்படுவதாக | குறைந்த கிரயத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| ii பௌதீக பரிசோதனையின் பிரகாரம் வடிகால் முறைமையின் கொங்கிரீட் முறையாக பதப்படுத்தப்படாமையால் தேன் வதை போல் காணப்பட்டது. கருங்கல் சுவருருக்கான துவாரங்களுக்கு சாந்து பூசுதல் இடம்பெறாதிருந்ததுடன் கலவை கூடுதலாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் சுவர் நிர்மாணத்தின் போது ரூபா 56,031 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மிகை கொடுப்பனவு பிடிக்காசு தொகை கொடுப்பனவு சந்தர்ப்பத்தின் போது அறவிடப்படுவதாக | மதிப்படப்பட்ட நியமத்தில் வேலை நிறைவேற்றப்பட வேண்டும் |
| (ஆ) நானுஓயா விளையாட்டரங்கினை நிர்மாணித்தல் ரூபா 1,486,600 | | |
| (i) பொறியியலாளர் அங்கீகரித்த 750 கனமீற்றர் மண் விளையாட்டரங்கிற்கு வழங்கி நிரப்பி மட்டப்படுத்துவதற்காக ரூபா 1,468,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிரப்பபட்ட மண்ணில் பாரியளவிலான கருங்கற்களும் உள்ளடங்கி காணப்பட்ட போதும் | 2023 பெப்ரவரி 27 நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டதாகவும் நிரப்பிய மண் தொடர்பாக பொறியியலாளரின் பரிந்துரையை பெற்றுக் கொள்வதாகவும் | மதிப்பிடப்பட்ட நியமத்தில் வேலை நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரங்கிற்கு இட்ட மண் பொறியியலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட மண்ணா என்பரதை இனங்காண முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2022 மே 31 ஆம் திகதி ரூபா 394,675 ஆன முற்பணம் குறித்த ஒப்பந்தக்கார சங்கத்துக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2022 ஆகஸ்ட் வரை வேலை ஆரம்பிக்கப்படாமல் ஒப்பந்தக்கார சங்கம் மூன்று மாத காலம் அளவில் அரசின் பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியிருந்தது. | இறுதி பட்டியல் கொடுப்பனவின் போது நட்டத்தை அறவிடுவதாக | முற்பண கொடுப்பளவு தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமான பிரிவினால் நிலுவை வருமானம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் ஆதனங்களை தடை செய்வதற்கும் வழக்குத் தொடர்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் ஆண்டினுள் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |
| (ஆ) | சபையின் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக அபிவிருத்தி மதியுரை குழுக்களை தாபித்தல் மற்றும் அதன் பிரகாரம் அபிவிருத்தி செயற்திட்டங்களை இனங் காண்பதற்கும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் முன்மொழிவு செய்யப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு பாதீடு தயாரிக்கும் போது அபிவிருத்தி மதியரை குழு ஊடாக முன் மொழிவுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |
| (இ) | ஆண்டினுள் சமூக பங்களிப்பு நிகழ்ச்சி திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் சமூகத்தை முறையாக பலப்படுத்துவதற்கு செயல் நடவடிக்கை திட்டத்தின் மூலம் உன் மொழியப்பட்டிருந்த போதும் ஆண்டில் சமூக பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் எதுவும் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பிரதேசத்தின் அனைத்து பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வியை வழங்குவதற்குரிய 04 நோக்கங்களை செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் | இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 21 சதவீதம் முதல் நூறு சதவீதத்தை மிகைத்தும் 05 செலவின விடயங்களில் 03 சதவீதம் முதல் நூறு சதவீதத்தை மிகைத்து விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | குறைபாடுகளை தீர்வு செய்வதற்குக் நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு கவனமாக பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

## 4.3 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நுவரெலியா பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அதிகமான நீர் மூலாதாரங்கள் மற்றும் பிரதான கங்கைகளுக்குரிய நீர் வழங்குதல் இடம்பெறுகின்ற சுற்றாடல் முறைமைக்கு பாதிப்பு ஒன்று ஏற்படக் கூடிய வகையில் அதிகார பிரதேசத்தின் சேரும் கழிவுகள் இரண்டு மாதங்களுக்கு அண்மித்த காலமாக கழிவு பொருட்களை வகைப்படுத்தாமல் பிரதான வீதிக்கு அண்மித்து எடின்பரோ தோட்டத்தில் வெற்று நிலம் ஒன்றில் வெளியேற்றப்பட்டு இருந்தன | குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திண்ம கழிவு பொருள் முகாமைத்துவ செயற்பாட்டுக்காக முறையான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தாபித்தல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்து சீராக்குவதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதாக | சட்ட நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |